Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**S.T.C.: 77/2024**

DATE : 04.06.2026

Depositions of witness for Prosecution

PW 8

| Name | செல்வராஜ் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | ஆறுமுகம் | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04 th day of June 2026

**(எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. கார்த்திக் குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தற்போது கூமாப்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர்கள் திரு. முஜிபர் ரஹ்மான், திரு. முத்துமாரியப்பன் மற்றும் திரு.ராம்குமார் ஆகியோர்கள் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்ட காரணத்தினால் அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதாக சமாதான மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காரணத்தினால் வழக்கினை நிலுவையில்

வைத்திருப்பதால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை என்கின்ற காரணத்தினாலும், வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க வேண்டிய ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 27.09.2020 ம் தேதி 20.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. முஜிபர் ரஹ்மான் நிலையப் பொறுப்பில் இருந்த போது கருப்பையா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று நி.கு.எண்.485/2020, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினம் 31.03.2023 ம் தேதி காலை 21.00 மணிக்கு சாட்சிகள் முத்து, ராஜாமணி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் கருப்பையா, வேளாங்கன்னி, சடைபாண்டி, செல்லக்கனி, முத்தையா, சுந்தரம்மாள், முத்து, ராஜாமணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

கடந்த 26.09.2020 ம் தேதி வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை மருத்துவர் மதன்குமார் என்வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். பின்னர் 29.09.2020 ம் தேதி விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் முனிராஜ் என்பவர் வழக்கிய விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். கடந்த 07.03.2021 ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு. ராம்குமார் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை செய்த போது மேற்படி சார்பு ஆய்வாளரிடம் கூறியது போலவே கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. கடந்த 07.03.2021 ம் தேதி 1 மற்றும் 2 எதிரிகளை கைது செய்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தார். பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 323, 324 IPC–லிருந்து 294(b), 323 IPC– ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு